PAFFREL

# ජනාධිපතිවරණය - 2019.11.16

## පැෆ්රල් සංවිධානයේ පළමු මාධ්‍ය වාර්තාව

### <u>පසුබිම</u>

ශ්‍රී ලංකාවේ 07 වන විධායක ජනාධිපතිවරයා තෝරා ගැනීම වෙනුවෙන් පැවැත්වෙන ඡන්ද විමසීම 2019.11.16 වන දින එනම් තවත් දින 32 කින් පැවැත්වීමට නියමිත ය.

මෙම මස 06 වනදායින් අවසන් වූ නාම යෝජනා භාර ගැනීමේ කාලය තුළ පිළිගත් දේශපාලන පක්ෂ හා ස්වාධීන කණ්ඩායම් 41 ක් ඇප මුදල් තැන්පත් කරනු ලැබුව ද නාමයෝජනා භාරදී ඇත්තේ අපේක්ෂකයින් 35 ක් පමණි. ඒ පිළිගත් දේශපාලන පක්ෂ 18ක් වෙනත් දේශපාලන පක්ෂ 02 ක් සහ ස්වාධීන අපේක්ෂකයින් 15 ක් වශයෙනි. මෙවර ජනාධිපතිවරණයේ දී ඡන්දය ප්‍රකාශ කිරීම සඳහා ලියාපදිංචි ඡන්දහිමියන් 15,992,096 සුදුසුකම් ලබා ඇති අතර ඊට අදාළ කරගනු ලබන්නේ 2018 ඡන්දහිමි නාමලේඛනය යි. මෙම ඡන්දහිමියන් සඳහා දිවයින පුරා ඡන්ද මධ්‍යස්ථාන 12,845 ක දී ඡන්දය භාවිතා කිරීමට පහසුකම් සලසා ඇත.

මැතිවරණ රාජකාරී කටයුතු වල යෙදෙන රාජ්‍ය නිලධාරීන්ට තැපැල් ඡන්ද ප්‍රකාශ කිරීම සඳහා ඔක්තෝම්බර් මස 30, 31 යන දිනවල දී අවස්ථාව සළසා ඇති අතර ආරක්ෂක කටයුතු වල යෙදෙන පොලිස් නිලධාරීන් සඳහා තැපැල් ඡන්දය ප්‍රකාශ කිරීමට අවස්ථාව ලබාදී ඇත්තේ නොවැම්බර් 04 වන දින යි. ඉහත දින වල දී යම් නිලධාරියෙකුට ඡන්දය ප්‍රකාශ කිරීමට නොහැකි වන්නේ නම් නොවැම්බර් 07 වන දින දිස්ත්‍රික් මැතිවරණ කාර්යාලවල දී සිය තැපැල් ඡන්දය භාවිත කළ හැක.

යෝජිත ජනාධිපතිවරණය මෙරට මැතිවරණ ඉතිහාසයෙහි මෙතෙක් දක්නට නොලැබුන සුවිශේෂී සිදුවීම් කිහිපයකින් ම සමන්විත එකකි. ඒ අතරින් වඩාත් ප්‍රමුඛතම කාරණයක් වන්නේ මෙතෙක් ජනාධිපතිවරණයක් වෙනුවෙන් තරඟ වදින වැඩිම අපේක්ෂකයින් සංඛ්‍යාවකින් සමන්විත වීමයි. එමෙන්ම ස්වාධීන අපේක්ෂකයන් ලෙස හිටපු පාර්ලිමේන්තු මන්ත්‍රීවරුන් 15 දෙනෙකු මෙම මැතිවරණය සඳහා තරඟ වැදීම සුවිශේෂී කාරණාවකි. එමෙන්ම බලයේ සිටින ජනාධිපතිවරයා, අග්‍රාමාත්‍යවරයා හෝ විපක්ෂ නායකවරයා තරඟ නොකිරීම ද සුවිශේෂී ලක්ෂණයකි. ජනාධිපතිවරණ ඉතිහාසයේ අඟල් 26 කින් සමන්විත දිගම ඡන්ද පත්‍රිකාව ද අභ්‍යාස කිරීමට ඡන්දදායකයින්ට අවස්ථාව සැලසීම මෙම මැතිවරණයේ දක්නට ලැබෙන විශේෂ ලක්ෂණයකි.

## මැතිවරණ නිරීක්ෂණ ක්‍රියාවලිය

ජනාධිපතිවරණය ප්‍රකාශයට පත් කළ මොහොතේ සිට පුළුල් පරිමාණ මැතිවරණ නිරීක්ෂණ වැඩසටහනක් පවත්වාගෙන යාමට පැෆ්රල් සංවිධානය කටයුතු කරමින් සිටියි. මෙය පූර්ව මැතිවරණ නිරීක්ෂණ ක්‍රියාවලිය, මැතිවරණ දින නිරීක්ෂණ ක්‍රියාවලිය සහ පශ්චාත් මැතිවරණ නිරීක්ෂණ ක්‍රියාවලිය වශයෙන් අදියර 03 කින් සංයුක්ත කොට ඇත.

### පූර්ව මැතිවරණ නිරීක්ෂණ කාල සීමාව

පූර්ව මැතිවරණ නිරීක්ෂණ කාල සීමාව සම්බන්ධීකරණය කරමින් මෙහෙයුම් පවත්වාගෙන යාම සඳහා පැෆ්රල් සංවිධානය දිස්ත්‍රික් මට්ටමේ සංවිධාන ගණනාවක් සමග සහයෝගයෙන් කටයුතු කරනු ලැබේ. සෑම මැතිවරණ කොට්ඨාසයක් ම ආවරණය වන පරිදි දිගු කාලීන නිරීක්ෂකයන් 160 දෙනෙකු නිරීක්ෂණ ක්‍රියාවලියට අවතීරණ කර ඇත.

ජනාධිපතිවරණයට අදාළ නෛතික ප්‍රතිපාදන මැතිවරණ වැරදි හා දඬුවම් මැතිවරණය ආශ්‍රිත වෙනත් නීති උල්ලංඝනය කෙරෙන ආකාරයේ ක්‍රියාකාරකම් නිරීක්ෂණය සහ ඒවා ක්‍රමවත්ව වාර්තා කිරීම සම්බන්ධයෙන් පැෆ්රල් සංවිධානය මෙම දිගු කාලීන නිරීක්ෂකයන් හට ක්‍රමවත් මෙන්ම විධිමත් පුහුණුවක් ලබාදී ඇත.

### සර්ව පාක්ෂික මෙහෙයුම් මැදිරි

මීට අමතරව සෑම දිස්ත්‍රික්කයකම දිස්ත්‍රික් මැතිවරණ කාර්යාල හරහා ස්ථාපනය කොට ඇති මැතිවරණ පැමිණිලි මධ්‍යස්ථාන සඳහා කොළඹට දෙදෙනෙක් සහ අනෙකුත් දිස්ත්‍රික්ක සඳහා එක් අයෙකු බැගින් 26 දෙනෙකු මැතිවරණ පැමිණිලි ඒකකය ක්‍රියාත්මක සමස්ත කාල සීමාව ආවරණය වන පරිදි පැෆ්රල් සංවිධානය යෙදවීමට සැලසුම් කර ඇත.

### තැපැල් ඡන්ද නිරීක්ෂණය

තැපැල් ඡන්දය ප්‍රකාශ කිරීමට යෝජිත සිවු දින තුළ විශේෂ නිරීක්ෂණ වැඩපිළිවෙලක් දියත් වනු ඇත. ඒ අනුව සුවිශේෂී දේශපාලන සංවේදීතාවයක් සහිත බස් ඩිපෝ, යුද හමුදා කඳවුරු, අධ්‍යාපන කාර්යාල, පොලිස් ස්ථාන සහ වෙනත් තැපැල් ඡන්ද මධ්‍යස්ථාන ආශ්‍රිතව නිරීක්ෂණ කටයුතුවලට තැපැල් ඡන්ද නිරීක්ෂකයන් 1,000 ක් යෙදවෙනු ඇත. එසේම තැපැල් ඡන්ද ප්‍රකාශ කිරීමේ දිනවල දී සියලුම දිස්ත්‍රික්කවල අවශ්‍යතාවය පරිදි ක්ෂණික මැදිහත්වීම් සිදුකිරීම සඳහා විශේෂ ජංගම නිරීක්ෂණ කණ්ඩායම් ද යෙදවීමට සැලසුම් කොට ඇත.

## පැෆ්රල් පැමිණිලි ඒකකය

අප වෙත ලැබෙන පැමිණිලි විමර්ෂණය කර ඒවා සම්බන්ධයෙන් කඩිනමින් වැඩිදුර පියවර ගනු පිණිස විශේෂ මැතිවරණ නිරීක්ෂණ ඒකකයක් ස්ථාපිත කරන්නට පැෆ්රල් සංවිධානය කටයුතු කර ඇත. පළපුරුදු නීතිඥ කණ්ඩායමකින් සමන්විත 20 දෙනෙකුගෙන් යුත් කාර්ය මණ්ඩලයක් මෙම නිරීක්ෂණ ඒකකයට අනුයුක්ත කර ඇත.

ස්වාධීන නිරීක්ෂකයන් සහ සෙසු පුද්ගලයන් විසින් යොමු කරන මැතිවරණ පැමිණිලි මෙම විශේෂ නිරීක්ෂණ ඒකකයේ දී කඩිනමින් අදාළ ආයතනවලට යොමු කොට අවශ්‍ය විසඳුම් ලබාදීමට කටයුතු කරනු ලැබේ. එසේම මැතිවරණ දෙපාර්තමේන්තුව, අල්ලස් හෝ දූෂණ විමර්ෂණ කොමිෂන් සභාව, ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව සහ පොලිස් දෙපාර්තමේන්තුවට පැමිණිලි ඉදිරිපත් කරමින් එකී ආයතන මගින් සිදු කරනු ලබන විමර්ශන කටයුතු සඳහා සහයෝගය ලබා දෙනු ලබන අතර අවශ්‍ය වුවහොත් අධිකරණ ක්‍රියාමාර්ග කෙරෙහි යොමුවීමට ද පැෆ්රල් සංවිධානය කටයුතු යොදා ඇත.

## සමාජ මාධ්‍ය නිරීක්ෂණය

පැෆ්රල් නිරීක්ෂණ ඉතිහාසය තුළ ප්‍රථම වතාවට සමාජ මාධ්‍ය නිරීක්ෂණය සඳහා වැඩපිළිවෙලක් සැලසුම්කර ඇත. ඒ සඳහා සමාජ කණ්ඩායම් දෙකක් යොදවා ඇති අතර වෛරී ප්‍රකාශ, වැරදි තොරතුරු, වැරදි අර්තකථන ඇතුලත් ජනතාව නොමග යවන හෝ ජනතාව නොසන්සුන් කරවන ප්‍රකාශ පිළිබඳව නිරීක්ෂණය කර ඒවා මැතිරවණ කොමිෂන් සභාව වෙත වාර්තා කරනු ලබයි. එසේ වාර්ථා කරන තොරතුරු මැතිවරණ කොමිසම් සභාවේ අධීක්ෂණයෙන් අනතුරුව ශ්‍රී ලංකාවේ ෆේස්බුක් නියෝජිතයන්ට යොමුකර අවශ්‍ය ක්‍රියාමාර්ග ගනු ලබයි.

## මැතිවරණ දින නිරීක්ෂණ ක්‍රියාවලිය

පූර්වයෙන් ද සඳහන් කළ පරිදි ඉදිරි ජනාධිපතිවරණය දිවයින පුරා පිහිටි ඡන්ද මධ්‍යස්ථාන 12,845ක දී පැවැත්වෙනු ඇත. සෑම මැතිවරණ කොට්ඨාසයක් ම ආවරණය වන පරිදි ස්ථානගත නිරීක්ෂකයින් ද ඇතුළත්ව නිරීක්ෂකයන් 6,000 කට වැඩි ප්‍රමාණයක් යොදවන්නටත් ඒ හරහා නිදහස් හා සාධාරණ මැතිවරණයකට අවශ්‍ය පරිසරය එකී ඡන්ද මධ්‍යස්ථාන තුළ සහතික කරන්නටත් පැෆ්රල් සංවිධානය කටයුතු සලසා ඇත. එමෙන්ම සෑම ඡන්ද බල ප්‍රදේශයක් ම ආවරණය වන පරිදි පළපුරු නිරීක්ෂකයන් 04 කින් සමන්විත ජංගම රථ 160 ක් යෙදවීමට කටයුතු යොදා ඇත. තවද අවධානම් සහගත යැයි හඳුනාගන්නා ලද ප්‍රදේශවල නිරීක්ෂණ කටයුතු සඳහා විශේෂ ජංගම රථ 50 ක් යෙදවීමට ද කටයුතු සම්පාදනය කර ඇත.

## පශ්චාත් මැතිවරණ දින නිරීක්ෂණ ක්‍රියාවලිය

මැතිවරණය අවසන්වීමෙන් පසුව සති 02 ක කාලයක් පශ්චාත් මැතිවරණ දින නිරීක්ෂණ කාර්යයන් පවත්වාගෙන යනු ඇත.

## මැතිවරණ පැමිණිලි

මැතිවරණය ප්‍රකාශයට පත් කළ 2019.09.18 දින සිට 2019.10.14 දක්වා වූ කාල තුළ පැෆ්රල් සංවිධානයට ලැබුණු සමස්ත පැමිණිලි සංඛ්‍යාව 62 කි. ඒවා අතර රාජ්‍ය නිලධාරීන්ගේ පත්කිරීම්, මාරු කිරීම්, උසස් කිරීම්, රාජ්‍ය නිලධාරීන් දේශපාලන කටයුතු සඳහා යොදවා ගැනීම, රජයෙන් ලබාදෙන දීමනා සහ ආධාර දේශපාලන අරමුණු ඇතිව ලබාදීම, නීති විරෝධී ප්‍රචාරණ කටයුතු ආදිය ඇතුළත් වේ.

## රාජ්‍ය බලය හා දේපළ පරිහරණය

ජනාධිපතිවරණය ප්‍රකාශයට පත් කිරීමෙන් අනතුරුව මේ දක්වා කාලය තුළ ලැබුණු පැමිණිලි අතුරින් වැඩිම ප්‍රමාණයක් වාර්තා වන්නේ රාජ්‍ය දේපළ හා බලය අවභාවිතා කිරීම සම්බන්ධයෙනි. ඊට අදාළ පැමිණිලි 26ක ප්‍රමාණයකි. ඒ අතර, රැකියාව ලබාදීම් ප්‍රමුඛ තැනක් ගනු ලබයි. එමෙන්ම සංවර්ධන ව්‍යාපෘති,

සහනාධාර වැඩසටහන්, මධ්‍යම රජය හරහා මෙන්ම පළාත් පාලන ආයතනවල සහ පළාත් සභා සමහරකත් රැකියා ලබාදීම් සහ අපේක්ෂකයින් ප්‍රවර්ධනය සඳහා සම්පත් භාවිත කිරීම් පිළිබඳව ද තොරතුරු වාර්තා විය. කෙසේවෙතත් රාජ්‍ය බලය හා දේපළ භාවිතය සම්බන්ධයෙන් 2015 ජනාධිපතිවරණයට සාපේක්ෂව මෙවර ජනාධිපතිවරණයට අදාළව ලැබී ඇති පැමිණිලි සංඛ්‍යාව වැඩිවී ඇත (පැමිණිලි 21).

2015 ජනාධිපතිවරණය - 2014.11.21 දින සිට 2014.12.07 දක්වා ලැබූ පැමිණිලි සංඛ්‍යාව - 05

2019 ජනාධිපතිවරණය - 2019.09.27 දින සිට 2019.10.14 දක්වා ලැබී ඇති පැමිණිලි සංඛ්‍යාව - 26

## යහපත් ප්‍රවණතා

ජනාධිපතිවරණය ප්‍රකාශයට පත් කිරීමේ දින 2019.09.18 මේ දක්වා කිසිඳු ප්‍රචණ්ඩ ක්‍රියාවක් වාර්තා නොවීම මේ මැතිවරණයේ ඉතා සාධනීය ලක්ෂණයකි. ජනතාව, දේශපාලනඥයන් හා මැතිවරණ ව්‍යාපාරය පිළිබඳව යම් තරමක සවිඥානිකවීම හා දියුණු දේශපාලන සංස්කෘතියක මූලික ලක්ෂණ පෙන්නුම් කරයි. එමෙන්ම ඇල්පිටිය පළාත් පාලන ඡන්ද විමසීම මගින් ද ජාතික දේශපානඥයන්ට උගත හැකි පාඩම් තිබේ. ප්‍රාදේශීය සභා අපේක්ෂකයන් කිසියම් විනයක් හා සංයමයක් තුළ තම මැතිවරණ ව්‍යාපාරය ක්‍රියාත්මක කර ඇත. එමෙන්ම පශ්චාත් කාල සීමාව තුළ ද මේ දක්වා ජයග්‍රහණය සාමකාමීව භුක්ති විඳීම ඉතා හොඳ ප්‍රවණතාවයකි. යහපත් දේශපාලන සංස්කෘතියක ආරම්භයකි. මේ තත්ත්වය සමස්ත රට තුළම පවත්වා ගන්නට කටයුතු කිරීම මෙවර ජනාධිපතිවරණයට තරඟ කරන සියලුම අපේක්ෂකයන්ගේ වගකීමකි.

## ඉතිහාසයේ වැඩිම අපේක්ෂකයන් ජනපති සටනට

1982 සිට මේ දක්වා ලංකාවේ පැවැති ජනාධිපතිවරණ සියල්ලටම වඩා වැඩිම අපේක්ෂකයින් පිරිසක් නාමයෝජනා ලබාදුන් ජනාධිපතිවරණයට අප මුහුණ දෙමින් සිටී. එහෙත් එම පිරිස අතරින් සැබෑ ලෙසම ජයග්‍රහණය උදෙසා තම දේශපාලන මතය සමාජගත කිරීම සඳහා තරඟ කරන පිරිස කොපමණ ද, ඡන්ද දායකයන් නොමග යැවීම සඳහා වෙනත් දේශපාලන අරමුණු හා පුද්ගලික ලාභ උදෙසා තරඟ කරන පිරිස කොපමණ ද යන්න ගැඹුරින් විමසා බැලිය යුතුය.

| වර්ෂය | තරඟ කළ දේශපාලන පක්ෂ හා ස්වාධීන අපේක්ෂකයින් ගණන | වැඩිම ඡන්ද ලබාගත් දෙදෙනා හැර සෙසු පිරිස ලබාගත් ඡන්ද ඡන්ද සංඛ්‍යාව | වැඩිම ඡන්ද ලබාගත් දෙදෙනා හැර සෙසු පිරිස ලබාගත් ඡන්ද ප්‍රතිශතය |
|---|---|---|---|
| 1982 | 06 | 522,898 | 8.02% |
| 1988 | 03 | 235,719 | 4.62% |
| 1994 | 06 | 137,038 | 1.81% |
| 1999 | 13 | 520,849 | 6.17% |
| 2005 | 12 | 117.167 | 1.28% |
| 2010 | 22 | 208,689 | 1.97% |
| 2015 | 19 | 138,200 | 1.14% |

මේ අනුව පැහැදිලි වන්නේ 1982, 88, 99 මැතිවරණ හැර අනෙකුත් සෑම ජනාධිපති මැතිවරණයකදී ම වැඩි ඡන්ද ලබාගත් දෙදෙනා හැර සෙසු අපේක්ෂකයින් සියලුම දෙනා ලබාගෙන ඇත්තේ 2%කට අඩු ප්‍රමාණයකි. එබැවින් ඊළඟ ජනාධිපතිවරණයට පෙර අනවශ්‍ය ලෙස දේශපාලන අවශ්‍යතාවන්ගෙන් පුද්ගල

ප්‍රතිලාභ සඳහා ඉදිරිපත් වන අපේක්ෂකයන් වැළැක්වීමට නීති සම්පාදනය විය යුතුය. එසේ නොවුනහොත් ඉදිරි මැතිවරණයේ දී තරඟකරුවන් සියයක් හෝ ඊට වැඩි ප්‍රමාණයක් වුව ද තරඟ කළ හැකිය.

දැනටමත් මෙම අපේක්ෂකයන් වැඩිවීම හරහා ජනතා මුදල් කෝටි 100 කට වැඩි අතිරේක මුදලක් වියදම් වන බව මැතිවරණ කොමිසම පවසයි. එමෙන්ම එම වියදම්වලට අතිරේකව මතු වන ප්‍රායෝගික ගැටළු රාශියකි. ඡන්ද මධ්‍යස්ථාන තුළ නියෝජිතයින් 70 කට වැඩි පිරිසක් පත්කිරීමට සිදුවීම, ඡන්ද පත්‍රිකාව විශාල වීම, ගණන් කිරීමට යන අතිරේක කාලය සහ වැඩිහිටි ඡන්දදායකයන්ට දිග ලැයිස්තුවෙන් තම අපේක්ෂකයන් තෝරා ගැනීමට ඇති වන අපහසුතාවය ප්‍රායෝගිකව මුහුණ දෙන ගැටළු අතර වේ.

කෙසේවුවත් දේශපාලන දර්ශනයක් හෝ මතයක් සමග තරඟ කරන පාර්ශ්වයන්ට තරඟ කිරීමට ඇති ප්‍රජාතාන්ත්‍රීය ඉඩ ආරක්ෂා වන ආකාරයට මෙම නීති සම්පාදනය විය යුතුය.

## අපේක්ෂකයින් පණිවුඩයක්

තරඟකරුවන් 35 දෙනාම තරඟ වදිමින් සිටින්නේ ශ්‍රී ලංකාවේ රාජ්‍ය නායකයා, විධායකයේ ප්‍රධානියා හා පළමු පුරවැසියා වීමට වන බැවින් ඒ තෝරා ගැනීමේ ක්‍රියාවලියේ ද ගෞරවණීයභාවය රැක ගැනීම අපේක්ෂකයන්ගේ ද වගකීමක් වේ. ඔබ රාජ්‍ය නායකයා වීමට සුදුසු හෝ නුසුදුසුබව ඔබගේ ක්‍රියාකාරීත්වය මත එනම් ඔබ ඔබගේ මැතිවරණය මෙහෙය වන ආකාරය අනුව ජනතාව තේරුම් ගනු ඇත. එබැවින් අප ඔබ සැමගෙන් ඉල්ලා සිටින්නේ මැතිවරණ නීතියට අනුගතව ඔබගේ ප්‍රචාරණ ව්‍යාපාරය මෙහෙයවන ලෙසයි. එමෙන්ම ඔබගේ මැතිවරණ ව්‍යාපාරය තුළ, පොලිතින් භාවිතයෙන් බැහැරවීම හා පරිසර හිතකාමී මැතිවරණ ව්‍යාපාරයක් පවත්වා ගෙන යන ලෙසත්, මැතිවරණ කොමිෂන් සභාව විසින් නිකුත් කරනු ලබන මාර්ගෝපදේශ සහ උපමාන ප්‍රකාරව කටයුතු කරන ලෙසත්, ප්‍රචණ්ඩත්වය පිටු දකින ලෙසත්, ඡන්දය ලබා ගැනීමේ අරමුණෙන් මැතිවරණ දූෂණ කටයුතු හෝ ඡන්දදායකයන්ට අල්ලස් ලබාදීමෙන් වළකින ලෙසත්, වාර්ගික සහ ආගමික වෛරය පැතිරවීම සහ හෝ අනුබලදීම සිදු නොකරන ලෙසත්, රාජ්‍ය බලය හෝ රාජ්‍ය දේපල අයථා ලෙස මැතිවරණ ව්‍යාපාරයට භාවිත කිරීමෙන් වැළකී සිටින ලෙසත් දන්වා සිටිමු.

## ඡන්ද දායකයන්ට පණිවුඩයක්

ඉදිරි ජනාධිපතිවරණය සඳහා අපේක්ෂකයින් 35 දෙනෙකු ඉදිරිපත් වී සිටින අතර ඔවුන් දැනටමත් මැතිවරණ නීති උල්ලංඝනය කරමින් මැතිවරණ ප්‍රචාරක කටයුතු අරඹා තිබේ. එහෙත් මෙම තත්ත්වය වෙනස් කිරීමට පුරවැසියන් ලෙස ඔබට සුවිශාල බලයක් තිබේ. ඒ සඳහා ඔබ මැතිවරණ නීති, මැතිවරණ කොමිසමේ උපමාන, උපදෙස් නොසළකා ක්‍රියා කරන අපේක්ෂකයන් ප්‍රතික්ෂේප කළ යුතුය. කිසිවිටකත්, ප්‍රචණ්ඩකාරී හෝ ප්‍රචණ්ඩත්වයට තුඩුදිය හැකි කාරණාවලින් ඉවත් විය යුතුය. එමෙන්ම මැතිවරණ කාලය තුළ ඔබට භෞතික හෝ මානසික අල්ලස් ලබාදෙන අපේක්ෂකයන් පිළිබඳව සැලකිලිමත් විය යුතුය. එවැනි අල්ලස් ලබාදීම් හරහා ඡන්ද ලබා ගැනීමට උත්සාහ කරන කිසිවෙකු සැබෑ මහජන නියෝජිතයෙකු නොවනු ඇත.

## ஜனாதிபதித் தேர்தல் - 2019.11.16

## ப∴.வ்ரல் அமைப்பின் முதலாவது ஊடக அறிக்கை

### பின்னணி

இலங்கையின் 07 ஆவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காக நடாத்தப்படும் தேர்தல் 2019.11.16 ஆந் திகதி அதாவது, இன்னும் 32 நாட்களில் நடைபெறவுள்ளது.

இம்மாதம் 06 ஆந் திகதியுடன் முடிவடைந்த வேட்புமனுக்கள் கையேற்கும் காலத்துள் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 41 சுயேச்சைக் குழுக்களும் கட்டுப்பணம் செலுத்தியிருந்தபோதும், 35 வேட்பாளர்கள் மாத்திரமே வேட்புமனுப் பத்திரங்களைக் கையளித்துள்ளனர். 18 அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளும் 02 வேறு அரசியல் கட்சிகளும் 15 சுயேச்சை வேட்பாளர்களும் என்ற அடிப்படையில் இவ்வாறு வேட்புமனுக்களைக் கையளித்துள்ளனர். இம்முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பதற்கு பதிவுசெய்யப்பட்ட 15,992,096 தேருநர்கள் தகுதிபெற்றுள்ளதுடன், 2018 ஆம் ஆண்டுக்கான தேருநர் இடாப்பே இதற்காகப் பயன்படுத்தப்படுகிறது. இத்தேருநர்களுக்கு நாடுபூராவுமுள்ள 12,845 வாக்கெடுப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

தேர்தல் கடமை அலுவல்களில் ஈடுபடும் அரச உத்தியோகத்தர்களுக்கு அக்டோபர் மாதம் 30, 31 ஆகிய திகதிகளில் அஞ்சல்மூலம் வாக்களிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு நவம்பர் மாதம் 04 ஆந் திகதி அஞ்சல்மூலம் வாக்களிப்பதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்குறித்த தினங்களில் உத்தியோகத்தர் எவருக்கும் வாக்களிக்கும் வாய்ப்பு கிடைக்காத பட்சத்தில், அவர்கள் நவம்பர் மாதம் 07 ஆந் திகதி மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்களில் தமது அஞ்சல் மூல வாக்கை அளிக்க முடியும்.

உத்தேச ஜனாதிபதித் தேர்தல் இந்நாட்டின் அரசியல் வரலாற்றில் இதுவரை இடம்பெறாத சிறப்பான பல நிகழ்வுகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. இதுவரை ஜனாதிபதித் தேர்தலொன்றில் போட்டியிடும் அதிகூடிய எண்ணிக்கையான வேட்பாளர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடுவது அவற்றில் மிக முக்கியமான ஒரு விடயமாகும். அதேபோல், சுயேச்சை வேட்பாளர்களாக 15 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்முறை தேர்தலில் போட்டியிடுவது ஒரு சிறப்பம்சமாகும். அதேபோல் பதவி வகிக்கின்ற ஜனாதிபதி, பிரதம அமைச்சர் அல்லது எதிர்க்கட்சித் தலைவர் என்போர் இம்முறை தேர்தலில் போட்டியிடாமையும் ஒரு சிறப்பம்சமாகும். ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் 26 அங்குலம் நீளமான, மிக நீண்ட வாக்குச்சீட்டில் வாக்காளர்கள் வாக்களிக்கக் கிடைப்பது இம்முறை தேர்தலில் காணக்கிடைக்கும் மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

### தேர்தல் கண்காணிப்புச் செயன்முறை

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புச்செய்யப்பட்ட வேளையிலிருந்து பரந்தளவிலான தேர்தல் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு ப.்.வ்ரல் அமைப்பு நடவடிக்கை எடுத்து வருகிறது. தேர்தலுக்கு முந்திய கண்காணிப்புச் செயன்முறை, தேர்தல் தினத்தன்று இடம்பெறும் கண்காணிப்புச் செயன்முறை, தேர்தலுக்குப் பிந்திய கண்காணிப்புச் செயன்முறை என்ற அடிப்படையில் 03 கட்டங்களைக் கொண்டதாக இது அமைந்திருக்கும்.

## தேர்தலுக்கு முந்திய கண்காணிப்புக் கால வரையறை

தேர்தலுக்கு முந்திய கண்காணிப்புக் கால வரையறையை ஒருங்கிணைப்புச்செய்து நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ப.்.வ்ரல் அமைப்பு மாவட்டவாரியான பல்வேறு ஏற்பாட்டு நடவடிக்கைகளுடன் ஒத்துழைத்துச் செயலாற்றுகின்றது. ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தையும் உள்ளடக்கும் விதத்தில் நீண்டகால அனுபவம்வாய்ந்த 160 கண்காணிப்பாளர்கள் கண்காணிப்புச் செயன்முறையில் களமிறங்கியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்கான சட்ட ஏற்பாடுகள், தேர்தல் தவறுகளும் தண்டனைகளும், தேர்தல் சார்ந்த வேறு சட்டங்கள் மீறப்படும் விதத்திலான செயற்பாடுகள் என்பவற்றை கண்காணித்தலும் அவற்றை முறைப்படியாக அறிக்கையிடுதலும் சம்பந்தமாக ப.்.வ்ரல் அமைப்பு மேற்சொன்ன நீண்டகால அனுபவம்வாய்ந்த கண்காணிப்பாளர்களுக்கு முறைப்படியாகவும் கிரமமாகவும் பயிற்சி அளித்துள்ளது.

## சர்வ கட்சி நடவடிக்கைக் கூடம்

இதற்கு மேலதிகமாக ஒவ்வொரு மாவட்டத்திற்குமுரிய மாவட்ட தேர்தல்கள் அலுவலகங்கள் மூலம் தாபிக்கப்பட்டுள்ள தேர்தல் முறைப்பாட்டு நிலையங்களுக்கு கொழும்பிற்கு இருவரும் ஏனைய மாவட்டங்களுக்கு ஒருவரும் வீதம் 26 பேரை தேர்தல் முறைப்பாட்டு அலகு இயங்கும் காலப்பகுதியை உள்ளடக்கக்கூடிய வகையில் ஈடுபடுத்த ப.்.வ்ரல் அமைப்பு திட்டமிட்டுள்ளது.

## அஞ்சல் மூல வாக்களிப்பின் கண்காணிப்பு

அஞ்சல்மூல வாக்களிப்பிற்குரிய உத்தேச நான்கு நாட்களிலும் விசேட கண்காணிப்பு வேலைத்திட்டமொன்று முடுக்கிவிடப்படவுள்ளது. அதற்கமைய சிறப்பான அரசியல் கூருணர்வு கொண்ட பஸ் டிப்போக்கள், இராணுவ முகாம்கள், கல்வி அலுவலகங்கள், பொலிஸ் நிலையங்கள், வேறு அஞ்சல்மூல வாக்கெடுப்பு நிலையங்கள் சார்ந்த கண்காணிப்புப் பணிகளில் 1,000 அஞ்சல்மூல வாக்களிப்பு கண்காணிப்பாளர்கள் ஈடுபடுத்தப்படுவர். அதேபோல் அஞ்சல் மூலம் வாக்களிக்கும் நாட்களில் அனைத்து மாவட்டங்களின் தேவைக்கேற்ப துரித தலையீடுகளை மேற்கொள்வதற்கு விசேட நடமாடும் கண்காணிப்புக் குழுக்களையும் ஈடுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## ப.்.வ்ரல் முறைப்பாட்டு அலகு

எமக்குக் கிடைக்கின்ற முறைப்பாடுகள் குறித்து அணுகி ஆராய்ந்து அவை தொடர்பாக துரிதமாக மேலதிக நடவடிக்கை எடுக்கும் பொருட்டு விசேட தேர்தல் கண்காணிப்பு அலகொன்றை தாபிக்க ப.்.வ்ரல் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. அனுபவம்வாய்ந்த சட்டத்தரணிகளைக் கொண்ட 20 பேர் அடங்கிய பணிக்குழாமொன்று இக்கண்காணிப்பு அலகுடன் இணைக்கப்பட்டுள்ளது.

சுயாதீன கண்காணிப்பாளர்களும் ஏனையவர்களும் ஆற்றுப்படுத்தும் தேர்தல் முறைப்பாடுகள் இவ்விசேட கண்காணிப்புப் பிரிவிலும் துரிதமாக குறித்த நிறுவனங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு தேவையான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகிறது. அதேபோல் தேர்தல்கள் திணைக்களம், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வுசெய்வதற்கான ஆணைக்குழு, இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, பொலிஸ் திணைக்களம் என்பவற்றில்

முறைப்பாட்டைச் சமர்ப்பித்து குறித்த நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் புலனாய்வு நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படுவதுடன், தேவைப்படும் பட்சத்தில் சட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் ப.ஃவ்ரல் அமைப்பு நடவடிக்கை எடுக்கும்.

## சமூக ஊடகங்களின் கண்காணிப்பு

ப.ஃவ்ரல் அமைப்பின் தேர்தல் கண்காணிப்பு வரலாற்றில் முதல் தடவையாக சமூக ஊடகங்களைக் கண்காணிப்பதற்கான ஒரு வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக இரண்டு சமூகக் குழுக்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் வெறுப்பூட்டும் பேச்சுக்கள், பொய்யான தகவல்கள், உண்மைக்குப் புறம்பான பொருள்கோடல்கள் உள்ளிட்ட பொது மக்களை தவறாக வழிநடாத்தக்கூடிய அல்லது பொதுமக்கள் மத்தியில் அமைதியீனத்தை ஏற்படுத்தக்கூடிய பேச்சுக்கள் குறித்து கண்காணித்து, தேர்தல் ஆணைக்குழுவுக்கு அவை அறிக்கையிடப்படும். அவ்வாறு அறிக்கையிடும் தகவல்கள் தேர்தல் ஆணைக்குழுவின் கண்காணிப்பைத் தொடர்ந்து இலங்கை பே.ஃஸ்புக் நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கு அவற்றை அனுப்பிவைப்பதற்கு அவசிய நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

## தேர்தல் தினத்தன்று இடம்பெறும் கண்காணிப்புச் செயன்முறை

முன்கூறியவாறு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் நாடுபூராவும் அமைந்துள்ள 12,845 வாக்கெடுப்பு நிலையங்களில் நடைபெறும். ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தையும் உள்ளடக்குகின்றவாறு நிலைகொண்டிருக்கும் கண்காணிப்பாளர்களும் அடங்கலாக 6,000 க்குக் கூடுதலான கண்காணிப்பாளர்களை பணியிலீடுபடுத்துவதற்கும் அதன் ஊடாக சுதந்திரமானதும் நியாயமானதுமான ஒரு தேர்தலை நடாத்துவதற்கு அவசியமான சூழலை குறித்த வாக்கெடுப்பு நிலையங்களில் உறுதிப்படுத்துவதற்கும் ப.ஃவ்ரல் அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. அதேபோல், ஒவ்வொரு வாக்கெடுப்புப் பிரிவையும் உள்ளடக்குகின்ற விதத்தில் அனுபவம் வாய்ந்த 04 கண்காணிப்பாளர்களை உள்ளடக்கிய 160 நடமாடும் வாகனங்களை ஈடுபடுத்துவதற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் ஆபத்தானவை என்று அடையாளம் காணப்பட்ட பகுதிகளின் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக 50 விசேட நடமாடும் வாகனங்களை பணியில் அமர்த்துவதற்கும் ஏற்ற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## தேர்தலுக்குப் பிந்திய நாட்களில் கண்காணிப்புச் செயன்முறை

தேர்தல் முடிவடைந்த பின் 02 வார காலத்துள் தேர்தலுக்குப் பிந்திய கண்காணிப்புப் பணிகள் முன்னெடுக்கப்படும்.

## தேர்தல் முறைப்பாடுகள்

தேர்தல் அறிவிப்புச்செய்யப்பட்ட 2019.09.18 ஆந் திகதியிலிருந்து 2019.10.14 ஆந் திகதி வரையான காலத்தில் ப.ஃவ்ரல் அமைப்புக்குக் கிடைக்கப்பெற்ற மொத்த முறைப்பாடுகளின் எண்ணிக்கை 62 ஆகும். அரச உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவி உயர்வுகள், அரச உத்தியோகத்தர்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்படல், அரசாங்கத்தினால் வழங்கப்படும் கொடுப்பனவுகளையும் உதவிகளையும் அரசியல் நோக்குடன் வழங்குதல், சட்டவிரோத பிரசார நடவடிக்கைகள் முதலியன அவற்றில் அடங்கும்.

## அரச அதிகாரத்தையும் அரச சொத்துக்களையும் கையாளுதல்

சனாதிபதித் தேர்தல் அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து இன்று வரையான காலத்துள் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் அதிகூடிய எண்ணிக்கையானவை அரச சொத்துக்களையும் அதிகாரத்தையும் துஷ்பிரயோகம் செய்வது சம்பந்தமாக அறிக்கையிடப்படுகின்றன. இது தொடர்பான 26 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அவற்றில் தொழில் வழங்குதல் முக்கிய இடம் வகிக்கிறது. அதேபோல் அபிவிருத்தித்திட்டங்கள், மானிய உதவி வழங்கும் நிகழ்வுகள், மத்திய அரசு ஊடாகவும் உள்ளூர் அதிகாரசபைகளின் மற்றும் சில மாகாண சபைகளும் தொழில் வழங்கல்கள், வேட்பாளர்களை ஊக்கப்படுத்துவதற்கு வளங்களைப் பாவனைசெய்தல் தொடர்பாகவும் தகவல்கள் கிடைத்தன. இருப்பினும், அரச அதிகாரத்தையும் சொத்துக்களையும் கையாளல் தொடர்பில் 2015 ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒப்பீடாக இம்முறை ஜனாதிபதித் தேர்தலுக்குரியதாக கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை (21 முறைப்பாடுகள்) அதிகரித்துள்ளது.

2015 ஜனாதிபதித் தேர்தல் 2014.11.21 ஆந் திகதியிலிருந்து 2014.12.07 ஆந் திகதி வரையில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை – 05

2019 ஜனாதிபதித் தேர்தல் - 2019.09.27 ஆந் திகதியிலிருந்து 2019.10.14 ஆந் திகதி வரை கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை – 26

## சிறந்த போக்குகள்

ஜனாதிபதித் தேர்தல் அறிவிப்புச்செய்யப்பட்ட திகதியிலிருந்து (2019.09.18) இதுவரை எந்தவொரு வன்செயலும் அறிக்கையிடப்படாமை இத்தேர்தலின் சாலச் சிறந்த ஒரு பண்பாகும். அரசியல்வாதிகளும் தேர்தல் இயக்கமும் குறித்து பொதுமக்கள் ஓரளவு விழிப்புநிலையுடனும் முன்னேறிய அரசியல் கலாசாரமொன்றுடனும் இருக்கின்றனர் என்பதற்கான அடிப்படைப் பண்பை இது சுட்டி நிற்கின்றது. அதேபோல், எல்பிட்டிய உள்ளூர் அதிகாரசபைத் தேர்தலிலும் தேசிய அரசியல்வாதிகளுக்கு கற்றுக்கொள்ளக்கூடிய பாடங்கள் உள்ளன. பிரதேச சபை வேட்பாளர்கள் ஒழுக்க கட்டுப்பாட்டுடன் தமது தேர்தல் இயக்கத்தை முன்னெடுத்துள்ளனர். அதேபோல், தேர்தலை அடுத்த காலப்பகுதியிலும் இன்று வரை வெற்றியை அமைதியாக அனுபவிப்பதும் மிகச் சிறந்த ஒரு போக்காகும். சிறந்த அரசியல் கலாசாரமொன்றுக்கான ஆரம்பமாகும். இத்தகைய ஒரு நிலையை நாடு முழுவதிலும் பேண நடவடிக்கை எடுப்பது இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரதும் பொறுப்பாகும்.

## வரலாற்றில் அதிகூடிய எண்ணிக்கை வேட்பாளர்கள் ஜனாதிபதித் தேர்தல் களத்தில்

1982 தொடக்கம் இற்றை வரை இலங்கையில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்கள் அனைத்தையும் விட அதிகூடிய எண்ணிக்கையான வேட்பாளர்கள் வேட்புமனுக்களைக் கையளித்த ஜனாதிபதித் தேர்தலொன்றை நாம் எதிர்நோக்கியுள்ளோம். எனினும், அவர்களில் உண்மையிலேயே தனது வெற்றிக்காக தமது அரசியல் அபிப்பிராயத்தை சமூகத்தின் முன் வைப்பதற்காகப் போட்டியிடுபவர்கள் எத்தனை பேர், வாக்காளர்களை தவறாக வழிநடாத்துவதற்காகவும் வேறு அரசியல் நோக்கங்களுக்காகவும் தனிப்பட்ட ஆதாயங்களுக்காகவும் போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் எத்தனை பேர் என்பதை ஆழமாக பரிசீலிக்க வேண்டும்.

| ஆண்டு | போட்டியிட்ட அரசியல் கட்சி மற்றும் | அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக்கொண்ட | அதிகூடிய வாக்குகளைப் பெற்றுக்கொண்ட |
|---|---|---|---|

| | சுயேச்சை வேட்பாளர்களின் எண்ணிக்கை | இருவர் தவிர்ந்த ஏனையோர் பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை | இருவர் தவிர்ந்த ஏனையோர் பெற்றுக்கொண்ட வாக்குகளின் சதவீதம் |
|---|---|---|---|
| 1982 | 06 | 522,898 | 8.02% |
| 1988 | 03 | 235,719 | 4.62% |
| 1994 | 06 | 137,038 | 1.81% |
| 1999 | 13 | 520,849 | 6.17% |
| 2005 | 12 | 117.167 | 1.28% |
| 2010 | 22 | 208,689 | 1.97% |
| 2015 | 19 | 138,200 | 1.14% |

1982, 88, 89 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தல்கள் தவிர்ந்த ஏனைய எல்லா ஜனாதிபதித் தேர்தல்களிலும் அதிகூடிய எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றுக்கொண்ட இரு வேட்பாளர்கள் தவிர்ந்த அனைத்து வேட்பாளர்களும் 2% க்கும் குறைந்த எண்ணிக்கையான வாக்குகளையே பெற்றுக்கொண்டுள்ளனர் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது. ஆகையால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் அநாவசியமான முறையில் அரசியல் தேவைகளுக்காக, தனிப்பட்ட ஆதாயங்களுக்காக தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களைத் தடுப்பதற்கு சட்டவாக்கங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். அவ்வாறல்லாத பட்சத்தில், எதிர்வரும் தேர்தலிலும் போட்டியிடுபவர்களின் எண்ணிக்கை நூறாகவும் அல்லது அதற்குக் கூடுதலாகவும் அதிகரிக்கலாம்.

ஏற்கனவே இந்த வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் ஊடாக பொதுமக்கள் பணம் 100 கோடி ரூபாய்க்கு மேற்பட்டதாக மேலும் அதிகரித்துள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவிக்கின்றது. அதேபோல் அச்செலவுகளுக்கு மேலதிகமாக எழக்கூடிய நடைமுறைப் பிரச்சினைகள் ஏராளமுள்ளன. வாக்கெடுப்பு நிலையத்தில் 70 க்குக் கூடுதலான முகவர்களை நியமிக்க நேரிடுதல், வாக்குச்சீட்டின் நீளம் அதிகரித்தல், வாக்கெண்ணுவதற்கு மேலதிகமான காலம் தேவைப்படுதல், வயது முதிர்ந்த வாக்காளர்களுக்கு இத்தகைய மிக நீளமான வாக்குச்சீட்டிலிருந்து தாம் விரும்பும் வேட்பாளரைத் தெரிவுசெய்வதில் ஏற்படக்கூடிய அசௌகரியம் என்பன நடைமுறையில் முகங்கொடுக்கும் பிரச்சினைகளாகும்.

எவ்வாறாயினும், அரசியல் குறிகாட்டியொன்றுடன் அல்லது அபிப்பிராயமொன்றுடன் போட்டியிடும் தரப்பினருக்கு ஜனநாயக ரீதியாக போட்டியிடுவதற்கான வாய்ப்பு பாதுகாக்கப்படுகின்ற விதத்தில் குறித்த சட்டவாக்கம் இடம்பெற வேண்டும்.

## வேட்பாளர்களுக்கு விடுக்கும் ஒரு செய்தி

தேர்தலில் போட்டியிடும் 35 வேட்பாளர்களும் இலங்கையின் அரசுத் தலைவர், நிறைவேற்றுத்துறையின் பிரதானி, முதற் பிரசை பதவிக்குப் போட்டியிடுவதால், அத்தெரிவுச் செயன்முறையிலும் கௌரவத்தைக் காப்பது வேட்பாளர்களதும் ஒரு பொறுப்பாகும். தாங்கள் அரசுத் தலைவராவதற்கு பொருத்தமானவர் அல்லது பொருத்தமற்றவர் என்பது உங்கள் செயற்பாட்டின் அடிப்படையில் அதாவது தாங்கள் தங்கள் தேர்தலை நெறிப்படுத்தும் விதத்தின் அடிப்படையில் மக்கள் புரிந்துகொள்வர். ஆகையால், தேர்தல் சட்டத்தை அனுசரித்து தங்கள் பிரசார இயக்கத்தை முன்னெடுக்குமாறு நாம் உங்கள் அனைவரிடமும் வேண்டுகின்றோம். அதேபோல் தங்கள் தேர்தல் பிரசாரத்தில் பொலித்தீன் பாவனையைக் கைவிட்டு, சுற்றாடல் நட்புறவான தேர்தல் பிரசாரமொன்றை முன்னெடுத்துச் செல்லுமாறும் தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் வழிகாட்டுநெறிகளுக்கமைய செயலாற்றுமாறும் வன்செயலை ஒழித்துக்கட்டுமாறும் வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் தேர்தலின்போது ஊழல் பழக்கங்களில் ஈடுபடுதல் அல்லது வாக்காளர்களுக்கு இலஞ்சம் வழங்குவதைத் தவிர்க்குமாறும், இன மற்றும் மத குரோதத்தைப் பரப்பாமல் அத்துடன் அல்லது அதற்கு உடந்தையாக இராமல் இருக்குமாறும் அரச

அதிகாரத்தை அல்லது அரச சொத்துக்களை முறைகேடான விதத்தில் தேர்தல் பிரசார இயக்கத்திற்கு பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு அறியத் தருகின்றோம்.

## வாக்காளர்களுக்கு விடுக்கும் ஒரு செய்தி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் 35 வேட்பாளர்கள் போட்டியிடுவதுடன் அவர்கள் ஏற்கனவே தேர்தல் சட்டங்களை மீறி தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். எனினும், இந்நிலையை மாற்றுவதற்கு பிரஜைகள் என்ற ரீதியில் தங்களுக்கு மாபெரும் பலமுள்ளது. அதற்கு தாங்கள் தேர்தல் சட்டங்களையும் தேர்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டுநெறிகளையும் அறிவுறுத்தல்களையும் புறக்கணித்துச் செயற்படும் வேட்பாளர்களை நிராகரிக்க வேண்டும். ஒருபோதும், வன்செயல் அல்லது வன்செயலைத் தூண்டக்கூடிய விடயங்களை விட்டும் ஒதுங்கியிருக்க வேண்டும். அதேபோல், தேர்தல் காலத்துள் தங்களுக்கு பௌதிக ரீதியான அல்லது உள ரீதியான இலஞ்சம் வழங்கும் வேட்பாளர்கள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும். அவ்வாறான இலஞ்சம் வழங்குவதன் ஊடாக வாக்குகளைப் பெற்றுக்கொள்ள எத்தனிக்கும் எவரும் உண்மையில் மக்கள் பிரதிநிதிகள் அல்லர்.

**ரோஹண ஹெட்டிஆரச்சி**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**
**ப.ஃ.வ்ரல் அமைப்பு**

PAFFREL

# THE PRESIDENTIAL ELECTION – 16TH NOVEMBER 2019

# THE FIRST MEDIA REPORT - 15.10.2019

## BACKGROUD

The Presidential Election to elect the 7th Executive President of Sri Lanka is to be held on the 16th November 2019, i.e. after 32 days from now onwards.

Only 35 candidates submitted their nominations, though 41 members of different political parties and independence groups submitted their deposits, since the nominations ended on the 6th October 2019. There are nominations from 18 popular political parties, 2 other political parties and 15 independence candidates. According to the Election Registry of 2018, there are 15,992,096 registered voters who are eligible for this election. They will cast their votes in 12,845 polling booths throughout the island.

The postal voting for state officials who will be on duty on the day of election, is to be held on 30th and 31st of October, while the postal voting for security personnel, is to be held on the 4th of November. Anyone who cannot cast their ballot on any of these days as postal voting, can be done so on the 7th of November at their District Polling Centers.

The upcoming presidential election will be a significant event in the history of elections of Sri Lanka. Firstly, this is the presidential election so far, in which the highest number of candidates are contesting. Secondly, 15 former member of the parliament are contesting as independent contestants. Thirdly, this will be the first presidential election in which the President who is in power, the current Prime Minister or the Opposition Leader do not contest. Voters will have the opportunity to cast their ballots in this election on the longest ballot paper so far, i.e. 26 inches.

## ELECTION MONITORING PROCESS

PAFFREL is organizing an extensive Election Monitoring Campaign since the announcement of the Presidential Election. This will be carried out in 3 steps: Pre-Election Monitoring, Monitoring on the Election Day and Post-Election Monitoring.

## PRE-ELECTION PERIOD

PAFFREAL has collaborated with several organizations at the district levels in order to carry out Pre-Election Monitoring activities. PAFFREL has deployed 160 LTOs (Long Term Observers) to cover all the Polling Divisions in the country. PAFFREL has trained these LTOs in order to monitor and report all malpractices such as misuse of resources, violation of election laws & regulation, related activities.

## ALL PARTY OPERATION UNIT (APOU)

PAFFREL has deployed 26 monitoring & reporting personnel in total representing, 2 for Colombo and each for every district office covering all election district offices under the Election Complain Unit.

## MONITORING OF POSTAL VOTING

A special monitoring activity has been placed during the 4 days of Postal Voting. 1000 observers will be deployed in all politically sensitive centers such as Bus Depots, Educational Offices, and Camps and in Police Stations. During this period, a special Mobile Monitoring Units will be deployed for immediate intervention covering all the districts.

## PAFFREL COMPLAINT UNIT

A special Election Complaint Unit will be established in order to observe, receive, and to take necessary and immediate steps for all complains.

20 experienced personnel including a panel of lawyers have been appointed for this unit.

All complains received by this unit through the independent observers and related parties, will be directing for the relevant authorities and institutions for necessary actions and solutions. PAFFREL will be directing their complains to the Election Commission Department, Bribery and Corruption Unit, Human Rights Commission of Sri Lanka, Department of Police based on their relevance and will be helping them to carry out the investigations, and if necessary required legal measures will be taken.

## ELECTION DAY MONITORING

As mentioned above, the Presidential Election will be held on 12,845 polling booths. PAFFREL has planned to deploy more than 6000 personnel including Stationed Observers for all the polling divisions in order to create the environment for a free and fair election in every polling center. There will be 160 Mobile Units, consisting 4 well-experienced election observers for each unit covering all polling divisions. PAFFREL has planned to deploy 50 Special Mobile Units for the area sensitive in nature.

## POST-ELECTION MONITORING PROCESS

Post-Election Monitoring Activities will be carried out until the end of the second week after the election.

## ELECTION COMPLAINTS

PAFFREL has received 62 complaints since the announcement of the election on 18.09.2019 and until 14.10.2019.

Malpractices of the state officers, new appointments, transfers, promotions, usage of state officials for election campaigns, usage of different grants of the Government with political motives, illegal election campaigns, etc. included in these complaints.

### MISUSE OF STATE POWER & RESOURCES

The highest number of complaints is on the miss-use of state power & resources which counts to 26 complaints since the announcement of the Presidential Election. The new appointments take precedence in these complaints. The development projects, grants, and new appointments in central government, provincial councils, municipal councils and miss-use of state power & resources for candidates among these complaints.

However, the number of complains on the misuse of state power & resources has been increased (by 21 complaints) compared to the Presidential Election of 2015.

No of complains between 21.11.2014 to 07.12.2014 during the Presidential Election of 2015 is 05.
No of complains between 27.09.2019 to 14.10.2019 on the Presidential Election of 2019 is 26.

## POSSITIVE DEVELOPMENTS

It is significant that there is no reported Pre-Election Violence so far since the announcement of the election on 18.09.2019. People, politicians and election campaigns have become decisive and this is a sign leading to more developed political culture.
National politicians should learn lessons from the Alpitiya Local Government Election. Local politicians have carried out their campaigns in more disciplined manner. No Post-Election violence reported so far and this is a good sign. This may be the beginning of a new political culture. It is the responsibility of all the candidates to maintain similar discipline among them during the Presidential Election.

## HIGHEST NUMBER OF CANDIDATES ON THE HISTORY

We are encountering the highest no of nominated candidates since 1982 in Sri Lanka. It should be analyzed deeply that how many candidates really work for the victory by expressing their political ideologies and how many candidates are trying to mislead the public by their personal and political agendas for their own benefits.

| YEAR | NO OF POLITICAL PARTIES & INDEPENDENT CANDIDATES CONTESTED | NO OF VOTES OBTAINED BY OTHERS EXCEPT THE HIGHEST TWO CANDIDATES | % OF VOTES OBTAINED BY OTHERS EXCEPT THE HIGHEST TWO CANDIDATES |
|---|---|---|---|
| 1982 | 06 | 522,898 | 8.02% |
| 1988 | 03 | 235,719 | 4.62% |
| 1994 | 06 | 137,038 | 1.81% |
| 1999 | 13 | 520,849 | 6.17% |
| 2005 | 12 | 117,167 | 1.28% |
| 2010 | 22 | 208,689 | 1.97% |
| 2015 | 19 | 138,200 | 1.14% |

It is clearly indicated on the above table that except in 1982, 1988 & 1999 in all the other Presidential Elections, less than 2% of votes has been obtained by all the others, other than the major two candidates.

Therefore, candidates who are contesting for personal, political gains should be avoided on the next Presidential Election and necessary legal framework should be established for that. Otherwise there will be hundred or more candidates at the next time.

Election Commission has to spend more than 10 million extra as a result of increment on the number of candidates. There are a lot of practical issues align with the same. For example, no of representatives has increase to 70 in a polling booth, longer ballot paper, counting will take an extra time, voters may find difficult to select the preferred candidate out of the long list, etc.

Insofar, the legal framework should be enabled to represent political view & vision in a democratic way.

## MONITORING SOCIAL MEDIA

RAFFREL has planned for the first time in the history, an observation mechanism through social media. Two separate teams have been deployed to monitor hate speeches, wrong information, inappropriate explanations which can mislead public and create chaos, and they will be reported the Election Commission's attention for necessary actions. After the Election Commission's attention, they will be directed to Sri Lanka Facebook Representatives for necessary actions.

## APPEAL TO CANDIDATES

Since all 35 candidates are contesting for the Highest Position, Executive Leadership, and being the First Citizen of Sri Lanka, you are required to uphold the honor and dignity of the same. This is your responsibility. Your eligibility to be the leader of the state will decided by the voters based on your actions. Therefore you are requested to carry out your election campaigns according to the laws of this land.

Please refrain from usage of polythene, make your campaign environment friendly, adhere to the rules and regulations of the Commission of Election, shun all violence, do not engage in corrupt actions and giving bribes to obtain votes, do not create ethnic or religious disharmony, refrain from misusing state properties and power for election campaigns.

## APPEAL TO VOTERS

The 35 candidates who are contesting for the Presidential Election have begun their campaigns, and have already violated Election Rules & Regulations. You have the power to change this situation as citizen of this country. Therefore you should reject all the candidates who violate Election Rules & Regulations. Please refrain from violence or from anything leading to violence. And also please be vigilant on the candidates who offer physical or other kinds of bribes to secure their votes. Anyone offers bribe to secure votes is not a true representative of people.